முருகப்பெருமான் துணை

**மகான் சூரியபகவானைத் தொடர்ந்து**
**மகான் சந்திரபகவான் அருளிய யோக பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

22.06.2021, செவ்வாய்கிழமை

1. கந்தப் பெருமான் அவதாரமே
கலியிடர் போக்கும் சூட்சுமமே
விந்தைமிக்க ஞானயுகம் படைக்க
வேலவன் வடிவாய் வந்த அரங்கனே
2. அரங்கனே உன் பெருமை கூறி
அகிலமதில் பிலவ மிதுன திங்கள்
இருநான்கு திகதி குசனார் வாரம்
(பிலவ வருடம் ஆனி மாதம் 8ம் நாள், 22.06.2021 செவ்வாய்கிழமை)
இயம்பிடுவேன் யோகபிரசன்ன ஆசி
3. ஆசியை சந்திரபகவான் யானும்
அருளுவேன் உலகோர் நலம்பெற
வாசிவென்ற ஞானிகள் படை
வலம்வந்து அரங்கன் குடிலை
4. குடிலை காத்து வருகவே
குருவாக அரங்க ஞானியை
நாடிவந்து உலக மக்கள்
நம்பிக்கையுடன் ஏற்று வர
5. வருகவே மக்களுக்கு சக்தியாக
வரங்களாக ஆசி கிட்டியே
பெருமை மிக்க ஆதரவாகவும்
பேரிடர் காலம் பாதுகாப்பாகவும் மாறும்
6. மாறுதலை செய்ய வந்தநல்
மகான் அரங்கன் உபதேசம்
ஆறுமுகனாரின் ஞானமாக இருக்க
அனுகி தீட்சை பெற்ற மக்களுக்கு
7. மக்களுக்கு மரணம் விலகும்
மறுமை அல்லல் அகலும்
தேக்கமின்றி ஆற்றல் கூடும்
தெய்வ பலமுமாக மாறும்
8. மாறுதல் நிலை கூடகூட
மண்ணுலகம் கலியின் கொடுமைகளை
தேறவிடா மாற்றம் செய்து
தெய்வீகம் நிறைந்த ஞானபூமியாக

9. ஆகவே அற்புதம் நிகழும்
அறம் எனும் சக்தி நிரம்பி
யுகமே ஞானயுக மாற்றமாக
உலகே உயர்வு காண்கும்

10. காண்கவே ஞானத் தலைவன்
கந்தப் பெருமான் வழிபாடு
மேன்மேலும் வளர வளரவே
முழுமையான மாற்றங்கள் கூடி

11. கூடியே மக்களெல்லாம் ஞானிகளாகி
குவலயம் ஞானவான்கள் தலைமை
கூடியே ஞான ஆட்சி மலரும்
கூறிவந்த யோகபிரசன்ன ஆசி முற்றே

–சுபம்–